செ.வெ.எண்.12 நாள்.04.10.2019

## பத்திரிகை செய்தி

### கடலூர் மாவட்ட கிராம நிர்வாக அலுவலர்களுக்கான வாக்காளர் சரிபார்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வெ.அன்புச்செல்வன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

-------------

கடலூர் ஜாங்கீட் திருமண மண்டபத்தில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கான வாக்காளர் சரிபார்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வெ.அன்புச்செல்வன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (04.10.2019) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வெ.அன்புச்செல்வன்,இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்ததாவது.**

கடலூர் மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயரை சேர்த்தல், நீக்கல் மற்றும் மாற்றம் செய்வது தொடர்பான சிறப்பு சுருக்க முறை திருத்தம்-2020 மேற்கொள்ளும் பணி 01.09.2019 முதல் நடைபெற்று வருகிறது. இப்பணியில் 01.01.2020 நாளினை தகுதி ஏற்படுத்தும் நாளாகக்கொண்டு வாக்காளர் பட்டியலில் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர் பட்டியல் விபரங்களை சரிபார்க்கும் திட்டம் (Electors Verification Programme): (01.09.2019 முதல் 15.10.2019 வரை)**

- இத்திட்டத்தின்கீழ் வாக்காளர்கள் தாமாக முன்வந்து தங்களது/ தங்கள் குடும்ப உறுப்பினர்களது வாக்காளர் பட்டியலிலுள்ள விவரங்களை,

**1. Voter Help Line Mobile App.**

**2. NVSP Portal.**

**3. வாக்காளர் உதவி மையத்தின் கட்டணமில்லா தொலைபேசி எண் 1950.**

**4. வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகத்தில் இயங்கும் வாக்காளர் உதவி மையம்.**

**5. பொது சேவை மையங்கள் (Common Service Centres)**

**6. வாக்குச்சாவடி நிலை அலுவலரை நேரடியாக அனுகுவதன்** மூலாமாக மேற்படி விபரங்களை சரிபார்க்கலாம்.

- அவ்வாறு சரிபார்க்கும் போது வாக்காளர் பெயர், முகவரி உள்ளிட்ட விவரங்கள்/ புகைப்படம் ஆகியவற்றில் ஏதேனும் மாற்றம் செய்ய விரும்பினால் பின்வரும் ஆவணங்களின் அடிப்படையில் பொது சேவை மையங்கள்/ கைப்பேசி செயலி (Mobile App)/ www.nvsp.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்து கொள்ளலாம் அல்லது சம்மந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலரிடம் விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

**1. கடவுச் சீட்டு.**

**2. ஓட்டுநர் அடையாள அட்டை**

**3. ஆதார் அட்டை**

**4. குடும்ப அட்டை**

**5. வங்கி கணக்கு புத்தகம்**

**6. விவசாய அடையாள அட்டை**

**7. அரசு/ அரசு சார்ந்த நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட அடையாள அட்டை.**

**8. பான் கார்டு (Pan Card)**

**9. பதிவாளர் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையர் அவர்களால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் அடையாள அட்டை.**

**10. விண்ணப்பதாரர்/ பெற்றோர் ஆகியோரின் பெயரில் சமீபத்தில் பெறப்பட்ட குடிநீர் இணைப்பு/ தொலைபேசி கட்டணம்/ மின்கட்டணம்/ சமையல் எரிவாயு கட்டண ரசீது.**

மேலும், தாமாக முன்வந்து வாக்காளர் பட்டியல் விபரங்களை சரிபார்க்கும் ஒவ்வொரு வாக்காளர்களுக்கும் தலைமைத் தேர்தல் அலுவலரால் பாராட்டு சான்று வழங்கப்பட உள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஆர்.ராஜகிருபாகரன், சிதம்பரம் சார் ஆட்சியர் திரு.விசுமகாஜன்,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.விஜயராகவன், தேர்தல் வட்டாட்சியர் திரு.பாலமுருகன், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியிடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர்